# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 5**

## வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டிக்களுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. இப்போட்டிகள் பின்வரும் வயதுப்பிரிவுகளில் நடாத்தப்படும்.
   ஆரம்பப் பிரிவு - 5 வயது கீழ்ப் பிரிவு - 6-7 வயது
   மத்திய பிரிவு - 8-9 வயது மேற்பிரிவு - 10-12 வயது அதிமேற் பிரிவு – 13-17வயது

2. இப்போட்டி, நாளாந்தம் வீட்டில் குடும்ப அங்கத்தினருக்கிடையேயும், தமிழ்க் கல்வி நிலையங்கள் மற்றும் தமிழ்ச் சமூகத்தினரின் திருமணங்கள், தமிழ் கலாசார நிகழ்ச்சிகள் ஒன்று கூடல்கள் போன்ற பொது வைபவங்களின்போதும் இடம்பெறக்கூடிய உரையாடல்களைப் போன்றதாக இருக்கும். உலகத் தமிழ்ச் சமுதாயம் சம்பந்தமானதாகவும் அவரவர் வயதுப் பிரிவுக் கேற்பதாகவும் வேறுபட்ட தரங்களில் அமைந்திருக்கும். மேற்பிரிவு போட்டியாளர்கள் அவர்களின் பெற்றோரின் தாய்நாடு பற்றியும் அங்குள்ள சமகால நிலமை பற்றியும் அறிந்திருத்தல் விரும்பத்தக்கது.

3. இவ்வுரையாடல் சுமார் 7-10 நிமிடங்களுக்கு இடம்பெறும். ஒவ்வொரு போட்டியாளரிடமும் அறிமுகக் கேள்விகளுடன், குறைந்தது 5 கேள்விகள் கேட்கப்படும். இதில் உரையாடலுக்குத் தான் முக்கியமே தவிரப் போட்டியாளர்களின் பதில் தரவுகளின் நியாயப்பாடு, சரி/பிழைக்குப் புள்ளிகள் இல்லை. அத்துடன் இம்முறை, வாசித்தல் பகுதியும் இந்தப் போட்டியின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. படங்கள் முதல் தமிழ்க் கட்டுரையின் ஒரு பந்தி வரை வேறுபட்ட விடயங்கள் பிரிவிற்கேற்ப வழங்கப்படும்.

4. போட்டியாளர்கள் அனைவரும் போட்டி நடைபெறும் மண்டபம் அல்லாத ஒரு அறையில் இருக்கவேண்டும். அழைக்கப்படும் போட்டியாளர் மட்டும் போட்டி நடைபெறும் மண்டபத்திற்கு வர அனுமதிக்கப்படுவார். இப்போட்டிகளின் போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்தவேளையில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். போட்டியாளரின் பெற்றோர் முன்கூட்டியே மண்டபத்தில் வந்து இருக்கலாம் அல்லது தமது பிள்ளைகளை அழைக்கும் போது அவர்களுடன் மண்டபத்துள் வரலாம். ஏற்கனவே போட்டிகளைப் பார்த்த பெற்றோரும், குடும்பத்தினரும், போட்டி நடைபெறும் மண்டபத்தில் இருந்து வெளியேறிவிட்டுப் போட்டியில் பங்குபற்ற இருக்கின்ற தமது பிள்ளைகளை சந்திக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

5. போட்டியின் போது **உச்சரிப்பு** (15 %), **சொற்பிரயோகம்** (20 %), **உரையாடும் திறனும் & பங்குபற்றும் நிலையும்** (50 %), **தமிழ் வாசிப்பு** (15 %) ஆகியன கவனிக்கப்படும்.

6. **உச்சரிப்புத் திறன்** (15 %)
   - பிராந்தியப் பேச்சு வழக்கு, அதாவது தமிழ்நாடு, தமிழீழம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உச்சரிப்புகளும், அவர்களது பேச்சு வழக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள்
   - வல்லின, மெல்லின வேறுபாடு அறிந்து தெளிவாக உரையாடுதல்
   - தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English accent)
   - சொற்களை விழுங்காது உரையாடுதல்

7. **சொற்பிரயோகம்** (20 %)
   - தெளிவான, தூய தமிழ் மொழி நடையாக உரையாடல் இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு: PO Box 4040 Homebush NSW 2140. Tele: 02 882403051 or 0419.255 625E-mail:asogt.tc@gmail.com Web: www.kalappai.org

- ஒரு தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கில வார்த்தை பயன்படுத்தினால் அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

  (உதாரணமாக: `பந்து' என்பதற்குப் பதிலாக `Ball' என்று பாவிப்பது தவிர்க்க வேண்டும்).
- ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு உரிய தமிழ்ப் பதம் இல்லாதவிடத்தில் அதே சொல்லை அதே உச்சரிப்புடன் பயன்படுத்தலாம். உ+ம்: Australia, calculator, Video, DVD, CD எனும் பொதுப் பாவனையிலுள்ள சொற்கள் ஏற்கப்படும்.
- கேள்விகள் விளங்காவிட்டால், போட்டியாளர் கேள்வியை மீண்டும் ஒரு முறை வினாவும்படி கேட்கலாம். அப்படியும் கேள்விகள் விளங்காத சந்தர்ப்பத்தில், வேறு தமிழ்ச் சொல்லுடன் சற்று இலகு தமிழில் கேட்கப்படலாம்.

## 8. உரையாடும் திறனும் & பங்குபற்றும் நிலையும் (50 %)

- பல விதமான வினாக்களுக்கும் சரியான அளவான பதில் அளிக்கும் தன்மை.
  - விரிவான பதில் எதிர்பார்க்கப்படும் (Open ended question) வினா, உ+ம்:
    உங்களுடைய மறக்கமுடியாத ஒரு சம்பவம் பற்றிக் கூறுங்கள்?
  - சுருக்கமான பதில் எதிர்பார்க்கப்படும் (Close ended question) வினா, உ+ம்:
    உங்களுக்குப் பிடித்த ஒரு பறவையின் பெயரைச் சொல்லுங்கள்?
- சரளமாக உரையாடும் தன்மை. அநாவசியமான, அளவிற்கதிகமான, அதிகப்பிரசங்கித்தனமான, உரையாடலுக்கும், வெட்டொன்றான ஒரு வரிப் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். உரையாடலை இரசித்துப் பங்குகொள்ளும் தன்மை. அத்துடன் உணர்ச்சிகளுக்கு சரியான முகபாவனைகள் காட்டப்பட வேண்டும்.
- போட்டியாளர்கள் நடுவர்களைப் பார்த்துத் (good eye contact) தன்னம்பிக்கையுடன், உரையாடுதல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களில் ஒருவரை மட்டும் பார்ப்பதையோ, நிலத்தை, கூரையை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல் வேண்டும். உரையாடலின் போதும் கேள்விகள் கேட்கப்படும் போதும் அலட்சியமாக இருப்பதைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும், சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து உரையாடல்.
- கேள்வி கேட்கப்படும் போது குறுக்கீடு செய்யக்கூடாது. குறுக்கீடு செய்வதனால் கேள்வியை அவதானிக்காது, திரும்பவும் கேள்வியைக் கேட்டால் அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- சைகைகளினால் வழங்கப்படும் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

## 9. தமிழ் வாசிப்பு (15 %)

- மொழி கற்றலில் 'வாசித்தல்' மிக முக்கியமானது. சிறிய வயதுப் பிரிவிற்குப் படங்களை அல்லது எழுத்துக்களைக் காட்டி அவர்களுடன் உரையாடல் நடாத்தப்படும்.
- மற்றப் பிரிவினருக்கு வசனங்களையோ, ஒரு தமிழ்க் கட்டுரையின் பந்தியையோ வாசிக்கும்படி கேட்கப்படும். இந்த வசனங்கள், பந்திகள் தமிழ்ப் பாடப் புத்தகங்களிலிருந்து தெரிவு செய்யப்படும்.
- அதிமேற்பிரிவினருக்கான பந்திகள் தமிழ் நூல், செய்தித்தாள், அல்லது சஞ்சிகைகளிலிருந்து பெறப்படும்.
- இங்கு உச்சரிப்பு, சரளமாக வாசிக்கும் திறன், பொருள் உணர்ந்து வாசித்தல் என்பன கவனிக்கப்படும்.

## 10) போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:

- போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாகத் தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- விண்ணப்பக் கட்டணத்தை (ஒரு போட்டிக்கு $5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தைக் குறைக்கவும்.
- மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையாக எமது விதிமுறைகளை வாசிக்கவும் அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.
- போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார்.
- எமது பரீட்சைச் சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புப் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**

தொடர்புகளுக்கு: PO Box 4040 Homebush NSW 2140. Tele: 02 882403051 or 0419.255 625E-mail:asogt.tc@gmail.com Web: www.kalappai.org